4. 20-2-1996-ஆம் நாளன்று ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது எழுப்பப்பட்ட ஒரு கோரிக்கை குறித்து முதலமைச்சரின் விளக்கம்

காவலர் பணி நியமனத்தில் ஆதிதிராவிட இனப் பெண்களுக்கான உயர அளவு வரம்பு குறித்து—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய பதிலுரையின்போது திரு. தம்புசாமி அவர்கள் எழுப்பிய ஒரு பிரச்சினைக்கு, அவர் கடைசி நேரத்தில் விளக்கம் என்று கேட்ட காரணத்தால், சில பல விளக்கங்களை முழுமையாகத் தெரிவிக்க அன்று இயலவில்லை. எனவே, அதுபற்றி—காவல் துறைக்கு ஆட்களை எடுப்பது பற்றிய பிரச்சினையில்—மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேரவைக்கு ஒரு விளக்கத்தை அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த விளக்கத்தை இப்போது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அளிப்பார்கள்.

பிற்பகல் 12.50

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான் பதிலுரையை வழங்கியபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள், காவல் துறையில் காவலர் பணி நியமனத்திற்கான உயர வரம்பை ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த ஆண்களுக்குத் தளர்த்தியதைப்போல பெண்களுக்கும் தளர்த்த வேண்டும் என்ற கருத்தை எடுத்து வைத்தார். அவர் எழுப்பிய வினாவுக்கு அவருக்கு பதில் சொல்லவேண்டுமென்று நான் விரும்பினாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையைவிட்டு வெளியேறிவிட்டார். இருப்பினும் இந்த விளக்கம் மற்றவர்களுக்கும் தேவை, அதனால் இப்போது நான் அதைத் தெரிவிக்கின்றேன். அந்தப் பொருள் தொடர்பான சில விவரங்களை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தற்போது பெண் காவலர்களை நியமிப்பதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள உயர அளவு 155 சென்டி மீட்டர் ஆகும். அதாவது கிட்டத்தட்ட 5 அடி 2 அங்குலம் மட்டுமே. பொதுவாக இந்த உயர அளவு தொடர்பாக இதுவரை எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. மேலும்

பெண் காவலர்கள் தேர்வுக்கு வந்திருந்த ஆதிதிராவிடர் இனப் பெண்களில் பெரும்பாலோருக்கு இந்த உயர அளவு ஒரு பிரச்சினையாகவோ தடைக் கல்லாகவோ இருக்கவில்லை. இது அனுபவத்தின் அடிப்படையில் கண்ட ஒரு உண்மை. ஆனால், ஆண் காவலர்கள் தேர்வின்போது, ஆதிதிராவிடர் பிரிவைச் சார்ந்த பல ஆண்களுக்கு உயர அளவு ஒரு பிரச்சினையாக இருப்பது அனுபவபூர்வமாகத் தெரிய வந்தது. எனவே, ஆண் காவலர் தேர்வுக்கு மட்டும் ஆதிதிராவிடர் பிரிவைச் சார்ந்தவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட உயர அளவை 168 சென்டி மீட்டரிலிருந்து, 3 சென்டி மீட்டர் குறைத்து, 165 சென்டி மீட்டர், அதாவது 5-½ அடி என்று நிர்ணயம் செய்து நாங்கள் ஆணை பிறப்பித்தோம். அத்தகைய அவசியம் பெண் காவலர்களைத் தேர்வு செய்யும்போது எழவில்லை. ஏனென்றால், பெண் காவலர்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட உயர அளவான 155 சென்டி மீட்டர் பொதுவாகவே குறைவாக அமைந்துள்ளதாலும், ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த பெண்களுக்கு இந்த உயர அளவினால் எந்தவிதமானப் பிரச்சினையும் ஏற்படவில்லை என்பதாலும் இந்த உயர அளவை மேலும் குறைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் ஏற்கெனவே இன்று வீரப்பன் பற்றிய சிறப்புக் கவன ஈர்ப்புக்கு நான் அளித்த பதிலின் தொடர்ச்சியாக மேலும் சில விவரங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வீரப்பனால் ஒரு காவல் துறை டி.எஸ்.பி.-யும் மற்றும் இருவரும் கடத்தப்பட்டபோது மத்திய அரசிடம் என்.எஸ்.ஜி.-யை அனுப்புமாறு கேட்டுக்கொண்டோம். அவர்கள் 180 பேர் ஒரு பிரிக்கேடியர் தலைமையில் வந்து அடர்த்தியான காட்டுப் பகுதியைப் பார்த்துவிட்டு, இது எங்களுக்குப் பழக்கமில்லாத என்வயரன்மென்ட், பழக்கம் இல்லாத சூழ்நிலை, ஆகவே, எங்களால் எதுவும் செய்ய இயலாது என்று கூறிவிட்டு, திரும்பச் சென்று விட்டார்கள். அதற்குப் பிறகுதான் பார்டர் செக்யூரிட்டி ஃபோர்ஸ் படையினர் மத்திய அரசால் அனுப்பப்பட்டு வந்தார்கள். அவர்களும் சில காலம் இருந்துவிட்டு பெரிதாக எதையும் சாதிக்காமல் போய்விட்டார்கள். ஆனால், நம்முடைய தமிழகக் காவல் துறை அதிரடிப் படையினரும், கர்நாடக மாநில காவல் துறை அதிரடிப் படையினரும் தொடர்ந்து மனச்சோர்வு அடையாமல் வீரப்பனையும், அவனது கும்பலையும் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

5. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 1996-97-பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1996-97 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். திரு.எஸ். டேனியல்ராஜ், இருக்கையில் இல்லை, திருமதி ப. சரஸ்வதி. (குறுக்கீடு) பேச அழைக்கப்படுகிறபோது உறுப்பினர் இருக்கையில் இருக்க வேண்டும். திரு.எஸ். டேனியல்ராஜ்.

பிற்பகல் *12.55*

திரு.எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1996-97*-ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக கருத்துக்களைக் கூற விழைகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலும், ஆளுநருடைய அறிக்கையிலும், ஆளுநர் அறிக்கைக்கு பதிலுரை வழங்கிய முதலமைச்சர் பதிலுரையிலும் இதை நாங்கள் பார்க்கும்போது, இந்த அறிக்கை வரவிருக்கிற பொதுத் தேர்தலை மனதிலே கொண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கையாகத்தான் நாங்கள் கருதுகிறோம். இந்த பட்ஜெட்டைப் பொறுத்தமட்டிலே, இடைக்கால பட்ஜெட்டாக இருந்தாலும்கூட, *680* கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட்டாக அறிவித்ததைப் பார்க்கும்போது, நிச்சயமாக விலைவாசிகள் உயர்ந்து அதன் மூலமாக ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் *15* மாவட்டங்கள் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டாலும்கூட இந்த நிதிநிலை அறிக்கையிலே வறட்சி நிவாரணப் பணிகளுக்காக எந்தவொரு நிதியும் வழங்கப்படவில்லை என்பதைப் பார்க்கும்போது எங்களுக்கு மிகவும் ஏமாற்றம் அளிக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து ஆய்வு நடத்தி அதற்குப் பின்பாக *15* மாவட்டங்களினுடைய வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்வதற்காக துயர்துடைப்பு பணிகளுக்காக ரூ. *266* இலட்சம் கொண்ட ஒரு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்களே தவிர, இதுவரையிலே வறட்சி நிவாரணப் பணிகளுக்காக எந்தவித நிதியும் ஒதுக்கீடு செய்யவில்லை. மத்திய அரசினுடைய திட்டங்களான ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் ஆகிய திட்டங்களை வறட்சி நிவாரணத் திட்டங்களாக மாற்றுதல் செய்து